# தூத்துக்குடி மாநகராட்சி

## கூட்டப்பொருள்

2017ஆம் ஆண்டு ஜுன் மாதம் 30ம் நாள் நடைபெற்ற கூட்ட நடவடிக்கைகள்.

## பொருள்

| மாமன்ற கூட்ட தேதி | வரிசை எண் மற்றும் மாமன்றப் பொருள் | மாமன்ற தீர்மானம் |
|---|---|---|
| | 1)தூத்துக்குடி மாநகராட்சியில் செயல்படுத்தப்பட்டு வரும் பாதாளச்சாக்கடை திட்ட ( UGD ) பணிகளுக்காக குடிநீர் மற்றும் சுகாதார கூட்டு நிதியத்திடமிருந்து ரூ 20 கோடிக்கு மறுகடன் பெறப்பட்டு 01/01/2013 முதல் வட்டி மற்றும் அசல் தவணை தொகை (UGD ) திட்ட வங்கி கணக்கில் இருந்து செலுத்தப்பட்டு வருகிறது. தற்போது மேற்படி கடன் திட்டத்திற்கு 19வது தவணை வட்டியாக ரூ 2958333/—ம் அசல் தவணை தொகையாக ரூ 33,33,333/— என ஆக மொத்தம் ரூ 62,91,666/— செலுத்தும்படி கேட்பு அறிவிப்பு வரப்பெற்றுள்ளது. தற்போது (UGD ) திட்ட கணக்கில் ரூ 47.00 இலட்சம் மட்டுமே இருப்பில் உள்ளது. மேற்படி தொகை கடன் தொகையினை திருப்பி செலுத்திட போதுமான நிதி இல்லை. எனவே மாநகராட்சி குடிநீர் மற்றும் வடிகால் நிதி கணக்கில் இருந்து ரூ 16,00,000/— (ரூபாய் பதினாறு இலட்சம் மட்டும்) மாநகராட்சியின் (UGD) திட்ட கணக்கிற்கு மாற்றம் செய்திட மாமன்றத்தின் ஒப்புதல் வேண்டப்படுகிறது.<br><br>**அலுவலக குறிப்பு**<br><br>மாநகராட்சியில் இருந்து (UGD) திட்டத்திற்கு பெறப்பட்ட கடன் தொகையினை செலுத்திட ஏதுவாக ரூ 16,00,000/— (ரூபாய் பதினாறு இலட்சம் மட்டும்) (UGD) திட்ட வங்கி கணக்கிற்கு குடிநீர்மற்றும் வடிகால் நிதி கணக்கில் இருந்து மாற்றம் செய்திடவும், மேற்படி (UGD ) திட்ட வங்கி கணக்கில் நிதி நிலை சீரானவுடன் மீண்டும் ரூ 16,00,000/— ஐ குடிநீர் மற்றும் வடிகால் நிதி கணக்கிற்கு திரும்ப மாற்றம் செய்திடவும் மாமன்றம் ஒப்புதல் அளிக்கலாம்.<br><br>பி1/27967/2008 | .46) அலுவலகக் குறிப்பு அனுமதிக்கப்பட்டது |
| | 2) தூத்துக்குடி மாநகராட்சி சட்டம் 2008அத்தியாயம் 15ன்கீழ் துணை விதிகள் ஏற்படுதெதியும் 2016ம் ஆண்டு பிளாஸ்டிக் கழிவுகள் கையாளுதல் மற்றும் மேலாண்மையை மாநகராட்சியில் நடைமுறைப்படுத்தவும், அதில் | 47) அலுவலக குறிப்பு 1 மற்றும் 2 அனுமதிக்கப்பட்டது. |

கூறப்பட்டுள்ளவாறு பிளாஸ்டிக் பொருட்களை விற்பனை செய்யவும், உருவாகும் கழிவுகளை குறைக்கவும் , சேகரித்து அப்புறப்படுத்தவும், பதிவுசெய்தல், மற்றும் நிர்வாகக்கட்டணங்களை மாற்றியமைத்தும் மத்திய சுற்றுச்சூழல், காடுகள் மற்றும் பாதுகாப்புச்சட்டம் **1986(29.8.1986)** பிரிவு **6,8** மற்றும் **25**ன்படியும் பிளாஸ்டிக்கழிவு மேலாண்மை விதிகள் **2016**ன்படியும் வகுப்பு **15**ன்கீழ் உள்ளாட்சி அமைப்புகளுக்கான கட்டணம் மற்றும் பொறுப்புகள் அடங்கிய பிளாஸ்டிக்கழிவு மேலாண்மை திட்ட கட்டளை கொத்து **(**Bye laws**)** தயார் செய்யப்பட வேண்டும் என்று நகராட்சி நிர்வாக ஆணையர் அவர்களின் கடித ந.க.எண்.**33180/2016/**பி3 நாள்.**2.01.2017**ல் நகராட்சி நிர்வாக ஆணையர் அவர்களால் அறிவுறுத்தப்பட்டுள்ளது.

புதிய பிளாஸ்டிக் கழிவு மேலாண்மை விதிகள் **2016** மற்றும் துணைவிதிகள் தூத்துக்குடி மாநகராட்சியில் நடைமுறைப்படுத்த ஏதுவாக மாமன்ற கூட்டப்பொருள் அனுமதி வேண்டப்படுகிறது. மேலும் தூத்துக்குடி மாநகராட்சியில் நடைமுறைப்படுத்தப்பட கீழ்க்காணும் புதிய பிளாஸ்டிக் கழிவு மேலாண்மை விதிகள் **2016** மற்றும் துணைவிதிகளைஅமுல்படுத்த மாமன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

## பிளாஸ்டிக் கழிவு மேலாண்மை விதிகள் 2016 மற்றும் துணை விதிகள்

தூத்துக்குடி மாநகராட்சி சட்டம் 2008 அத்தியாயம் 15ன் கீழ் துணை விதிகள் ஏற்படுத்தியும் 2016ம் ஆண்டு பிளாஸ்டிக்கழிவு மேலாண்மை விதி உட்பிரிவுகளின்படியும் பிளாஸ்டிக்கழிவுகள் கையாளுதல் மற்றும் மேலாண்மையை மாநகராட்சியில் நடைமுறைப்படுத்தவும், அதில் கூறப்பட்டுள்ளவாறு பிளாஸ்டிக் பொருட்களை விற்பனை செய்யவும், உருவாகும் கழிவுகளைகுறைக்கவும், சேகரித்து அப்புறப்படுத்தவும்,பதிவு செய்தல், மற்றும் நிர்வாகக்கட்டணங்களை (User Fee) மாற்றியமைத்தும் மத்திய சுற்றுச்சூழல்,காடுகள் மற்றும் பாதுகாப்புச்சட்டம் 1986 (29.08.1986) பிரிவு 6, 8 மற்றும் 25ன்படியும் பிளாஸ்டிக்கழிவு மேலாண்மை விதிகள் 2016ன்படியும் வகுப்பு 15ன் கீழ் உள்ளாட்சி அமைப்புகளுக்கான கட்டணம் மற்றும் பொறுப்புகள் அடங்கிய பிளாஸ்டிக்கழிவு மேலாண்மை திட்ட கட்டளை கொத்து (Bye laws) தயார் செய்யப்பட வேண்டும் என்று நகராட்சி நிர்வாக ஆணையர் அவர்களின் கடித ந.க.எண் 33180/ 2016/ பி3 நாள்:02.01.2017ல் நகராட்சி நிர்வாக ஆணையர் அவர்களால் அறிவுறுத்தப்பட்டுள்ளது.

அதன்பேரில் கீழ்கண்டவாறு நிர்வாக கட்டண விகிதங்கள்

அபராத கட்டணங்கள் மற்றும் பிளாஸ்டிக்கழிவு மேலாண்மை திட்டம் செயல்படுத்துவதற்கான நடவடிக்கைகள் அடங்கிய கீழ்கண்ட துணை விதிகள் ஏற்படுத்தப்பட்டுள்ளது.

1. தூத்துக்குடி மாநகராட்சி எல்லைக்குட்பட்ட தெருக்கள், சந்துகள், கடைவீதிகள், குடியிருப்புகள், தொகுப்பு வீடுகள், உணவகங்கள், அலுவலகங்கள், வணிகவளாகங்கள் இன்ன பிற இடங்களில் வசிக்கும் மக்கள் பிளாஸ்டிக்கழிவுகளை தெருக்களிலோ, சாலை ஓரங்களிலோ, சந்துகளிலோ, கழிவுநீர்க்கால்வாய்களிலோ, பொது இடங்களிலோ மற்றும் நீர்நிலைகளிலோ போடக்கூடாது என்று தடைவிதிக்கப்படுகிறது.

2. மக்கள் வசிக்கும் மற்றும் கூடும் இடங்களில் உருவாகும் பிளாஸ்டிக்கழிவுகளை தனியாக பிரித்து திடக்கழிவு மேலாண்மை விதிகள் 2016-க்குட்பட்டு சேகரித்து ஒப்படைக்க வேண்டும்.இது வீடு அல்லது நிறுவனத்தின் உரிமையாளர் அல்லது பொறுப்பாளரது கடமையாகும். தேவையான கூடைகள் சொந்த செலவில் வாங்கி உபயோகிக்கப்பட வேண்டும்.

3. இவ்வாறு பிரித்து சேகரிக்கப்பட்ட பிளாஸ்டிக்கழிவுகளை மாநகராட்சி வாகனம் ஒவ்வொரு வீட்டிற்கும் குறிப்பிட்ட நேரத்தில் நேரில் வந்து பெற்றுக்கொள்ளும். தனித்தனியாக பிரிக்கப்பட்ட இந்த பிளாஸ்டிக்கழிவுகளை வாகனத்தின் பொறுப்பாளரிடம் நேரில் ஒப்படைப்பது வீட்டின் அல்லது நிறுவனத்தின் உரிமையாளர் அல்லது பொறுப்பாளரது கடமையாகும். பிரிக்கப்படாத பிளாஸ்டிக்கழிவுகள் கண்டிப்பாக வாங்கப்படமாட்டாது.

4. அடுக்குமாடி குடியிருப்புகள், தொகுப்பு குடியிருப்புகள் மற்றும் இதர ஒன்றுக்கு மேற்பட்ட குடியிருப்புகள் உள்ள பகுதியில் உள்ள வீடுகளது அல்லது நிறுவனங்களது உரிமையாளர் மற்றும் அவர்களது பிரதிநிதிகள் மாநகராட்சியின் வாகனம் வரும் போது அவை நிறுத்தப்பட்டிருக்கும் இடத்தில் நேரில் கொண்டு வந்து மேற்படி பிளாஸ்டிக்கழிவுகளை ஒப்படைக்க வேண்டும். மாநகராட்சி பணியாளர்களால் மாடி ஏறி வந்து பிளாஸ்டிக்கழிவுகள்பெற்றுக் கொள்ளப்பட மாட்டாது.

5. மீன், கோழி, ஆடு போன்ற இறைச்சி கடை நடத்துபவர்கள் வாடிக்கையாளர்களுக்கு பொட்டலம் பொதிந்து கொடுக்க

| | | | |
|---|---|---|---|
| | பாலிதீன் பைகளை பயன்படுத்த கூடாது. கழிவுகளை தெருக்களிலோ அல்லது திறந்த வெளியிடங்களிலோ அல்லது கழிவுநீர்க் கால்வாய்களிலோ போடக்கூடாது. அவைகளை கசிவு ஏற்படாத வகையில் பொட்டலங்களாக்கி மாநகராட்சியின் வாகனத்தில் ஒப்படைக்க வேண்டும். இதற்காக பிளாஸ்டிக் பைகளை பயன்படுத்தக் கூடாது.<br><br>6. மருத்துவமனை கழிவுகள், நோய் கிருமி சோதனை செய்யும் கூடங்கள் மற்றும் கால்நடை மருந்து கழிவுகளை எக்காரணம் கொண்டும்,பிளாஸ்டிக்கழிவுகளோடு சேர்க்கக் கூடாது. இந்திய அரசின் 1999ஆம் ஆண்டின் மருத்துவ கழிவு நீர் மேலாண்மை மற்றும் கையாளுதல் விதிகளில் கூறியவாறு மருத்துவமனை மற்றும் சோதனைச் சாலை பொறுப்பில் உரியவாறு அகற்றி அழித்தல் வேண்டும். மருத்துவமனை கழிவுகளை மாநகராட்சி பகுதியில் கொட்டுதல், புதைத்தல் மற்றும் எரித்தல் ஆகியவை தண்டனைக்குரிய குற்றமாகும்.<br>7. மாநகராட்சி எல்லைக்குள் பிளாஸ்டிக், ரப்பர், டயர் உள்ளிட்ட திடக்கழிவுகள் எவற்றையும் எரிப்பது தண்டனைக்குரிய குற்றமாகும்.<br><br>8. திருமண மண்டபங்கள், கோவில், சர்ச், மசூதிகள், சத்திரம், பொது கூட்டம் நடைபெறும் இடம் ஆகியவற்றில் நடைபெறும் திருமணம் மற்றும் இதர விசேஷங்களுக்கு தடை செய்யப்பட்ட பாலிதீன் கவர்கள், பிளாஸ்டிக் கப்புகள், பிளாஸ்டிக் இலைகள், பிளாஸ்டிக் மேஜை விரிப்புகள், அன்பளிப்பு கவர்கள் ஆகியவற்றை அனுமதிக்க கூடாது. மேலும் உருவாகும் பிளாஸ்டிக்கழிவுகளை முறையாக பிரித்து அப்புறப்படுத்த வேண்டும். இவற்றை கடைபிடிக்க செய்வது மேற்படி இடங்களின் உரிமையாளர்கள் மற்றும் பொறுப்பாளர்களின் கடமையாகும்.<br><br>9. உணவு விடுதிகள், தேநீர் விடுதிகள், தள்ளுவண்டியிலுள்ள உணவுப்பொருள் விற்பனை நிலையங்கள், இரவு நேரக்கடைகள், காய்கறி மொத்த வியாபார நிலையம், மார்க்கெட் ஆகியவற்றில் தடைசெய்யப்பட்ட பாலிதீன் பைகளை எக்காரணம் கொண்டும் பயன்படுத்த கூடாது. சூடான பொருட்களை பாலிதீன் கவர்களை பயன்படுத்தி பொதிந்து கொடுக்க கூடாது. உருவாகும் பிளாஸ்டிக்கழிவுகளைதெருக்களிலோ, சாலைகளிலோ அல்லது மாநகராட்சியின் எந்த ஒரு பகுதியிலோ போடக்கூடாது. அவ்வாறு போடுவது தண்டனைக்குரிய குற்றமாகும். அவற்றை தனியாக சேகரித்து உரிய முறைப்படி அப்புறப்படுத்த வேண்டும். | |

10. அச்சகங்கள்,தொழிற்சாலைகள், ரசாயன மருந்து கையாளும் தொழிற்சாலை மற்றும் இதில் குறிப்பிடாத அனைத்து வணிக மற்றும் தொழில் நிறுவனங்களில் ஏற்படும் பிளாஸ்டிக்கழிவுகளை மாநகராட்சி எல்லைக்குள் கொட்டவோ, எரிக்கவோ கூடாது.

11. பிளாஸ்டிக் பொருட்கள் தயாரிப்பு, மொத்த மற்றும் சில்லரை விற்பனையாளர்கள், பயன்படுத்துபவர்கள், பிளாஸ்டிக் தயாரிப்பிற்கான மூலப்பொருட்களை விற்பனை செய்பவர்கள் உரிய பதிவு கட்டணம் செலுத்தி மாநகராட்சியின் அனுமதி பெற்று மட்டுமே செயல்பட வேண்டும். பதிவு கட்டணம் கீழ்க்கண்ட அட்டவணையில் குறிப்பிடப்பட்டுள்ளது.

12. பிளாஸ்டிக்கழிவுகளை தனியாக பிரித்து கொடுக்காததயாரிப்பாளர்கள், மொத்த மற்றும் சில்லறை விற்பனையாளர்கள், வீடுகள் மற்றும் வாடிக்கையாளர்களுக்கு அபராத கட்டணம் கீழ்கண்ட அட்டவணையில் குறிப்பிடப்பட்டுள்ளவாறு நிர்ணயம் செய்யப்பட்டுள்ளது.

13. மேற்காணும் துணை விதிகளை மீறுபவர்கள் மீது தூத்துக்குடி மாநகராட்சி சட்டம் 2008 பிரிவுகளின் கீழ் சட்டப்படியான நடவடிக்கை தொடரப்படும். மேலும் 1986 ஆம் ஆண்டு மத்திய அரசின் சுற்றுச் சூழல் பாதுகாப்பு சட்டத்திற்கு எதிராக செயல்பட்டதாக கருதி உரிய நடவடிக்கைகள் தொடரப்படும்.

14. மேலும் விதிகளில் கூறப்பட்டுள்ள, நிர்வாக கட்டணங்களை விதித்தல்,வசூல் செய்தல், அபராதக் கட்டணங்களை வசூல் செய்தல் மற்றும் அவற்றின் தொடர் நடவடிக்கை ஆகியவற்றிற்கு, மாநகராட்சியின் ஆணையாளருக்குமாநகராட்சி மன்றத்தினரால் அதிகாரம் வழங்கப்பட்டுள்ளது.

15. பிளாஸ்டிக்கழிவு மேலாண்மை விதிகள் 2016 பிரிவு (9) ன்படி,தயாரிப்பளர்கள், இறக்குமதியாளர்கள் மற்றும் பொருட்களின் மீது அங்கீகார அடையாள உரிமையாளர்கள் (Brand Owners) தங்களது செயல்பாடுகளினால் உருவாகும் பிளாஸ்டிக் கழிவுகளை பிரித்து, சேகரித்து சுற்றுப்புறச்சூழலுக்கு மாசு ஏற்படாத வண்ணம் அப்புறப்படுத்துவது குறித்த திட்டத்தினை தூத்துக்குடி மாநகராட்சியின் ஒப்புதலுடன் 6 மாத காலத்திற்குள் தயாரித்து அவற்றை 2 வருட காலக் கெடுவுக்குள் நடைமுறைப்படுத்த வேண்டும்.

| | | |
|---|---|---|
| | 16. நிர்ணயிக்கப்படும் பதிவுக்கட்டணம் மற்றும் அபராதக்கட்டணம்பொது சுகாதார பிரிவின் மூலம் வசூலிக்கப்படும்.<br><br>17. பிளாஸ்டிக் பொருட்கள் தயாரிப்பாளர்கள் அனுமதிக்கப்பட்ட (INDIAN STANDARD CODE) நிறம் மற்றும் நிறமிகள் மட்டுமே பயன்படுத்த வேண்டும்.<br><br>18. மறுசுழற்சி முறையில் தயாரிக்கப்பட்ட பாலித்தின் பைகளை எக்காரணம் கொண்டும் உணவு பதார்த்தங்கள் விற்பனை செய்வதற்கு பயன்படுத்தக்கூடாது.<br><br>19. பிளாஸ்டிக் கழிவுகளை உற்பத்தி செய்வோர் அதனை குறைப்பதற்கும் அவற்றை முறையாக திடக்கழிவு மேலாண்மை விதிகள் 2016 பிரகாரம் அவ்வப்போது அறிவிக்கப்படும் நடைமுறைகளுக்குட்பட்டும் கையாளுவதற்கு நடவடிக்கைகள் மேற்கொள்ள வேண்டும்.<br><br>20. பொது கூட்டங்கள் மற்றும் பொது நிகழ்ச்சிகளை நடத்துவோர் குறைந்தபட்சம் 3 நாட்களுக்கு முன்னதாக மாநகராட்சியின் அனுமதி பெற வேண்டும்.<br><br>21. பன்னடுக்கு பாலிதீனாலான பை, சிறுபை மற்றும் பொட்டலங்கள் தயாரித்து சந்தை படுத்தும் உற்பத்தியாளர்கள், இறக்குமதியாளர்கள், தர அடையாளதாரர்கள் (Brand Owners) தங்களது பொருட்களின் மூலம் உருவாகும் பிளாஸ்டிக் கழிவுகளை சேகரிப்பது மற்றும் அப்புறப்படுத்துவது குறித்து திட்டம் தயாரித்து 6 மாத காலத்திற்குள் மாசு கட்டுப்பாட்டு வாரியம் ஒப்புதல் பெற்று 2 ஆண்டுகளுக்குள் நடைமுறைப்படுத்த வேண்டும்.<br><br>22. மறுசுழற்சி செய்ய முடியாத பன்னடுக்கு பிளாஸ்டிக் பைகளை தயாரிப்போர் 2 வருட கால இடைவெளிக்குள் அவற்றை நிறுத்தி கொள்ள வேண்டும்.<br><br>23. பிளாஸ்டிக் பைகள் தயாரிப்பாளர்கள் அரசாணை வெளியிட்ட 3 மாத காலத்திற்குள் மாசு கட்டுப்பாட்டு வாரியத்தில் பதிவு செய்து கொள்ள வேண்டும்.<br><br>24. பிளாஸ்டிக் மேலாண்மை விதிகள் 2016-ன் கீழ் துணை விதிகள் ஏற்படுத்தப்பட்டு அரசிதழில் வெளியான 6 மாத காலத்திற்கு பின் எந்த ஒரு தயாரிப்பாளர்கள் / உற்பத்தியாளர்கள் மாசு கட்டுப்பாட்டு வாரியத்தின் உரிய | |

| | | |
|---|---|---|
| | பதிவு மற்றும் அங்கீகாரம் இல்லாமல் பிளாஸ்டிக் அல்லது பன்னடுக்கு பிளாஸ்டிக் பொருட்களை பயன்படுத்தக்கூடாது.<br><br>25. பிளாஸ்டிக்கை மூலப் பொருளாக கொண்டு கேரி பேக், பிளாஸ்டிக் சீட் போன்றவற்றை தயாரிப்போர் வாடிக்கையாளர்கள் / கையாளுவோர் குறித்த விபர பதிவேடுகளை பராமரிக்க வேண்டும்.<br><br>26. பிளாஸ்டிக் கையாளுதல் தொடர்பான புகார்கள் மற்றும் சந்தேகிக்கப்படும் புகார்கள் குறித்து எந்தவொரு நேரத்திலும் (இரவு அல்லது பகல்) ஆய்வு செய்ய ஆணையர், பொறியாளர்கள், நகர்நல அலுவலர், சுகாதார அலுவலர்கள், சுகாதார ஆய்வாளர்கள் ஆகியோர் குழுவாகவோ தனியாகவோ ஆய்வு மேற்க்கொள்ள அதிகாரம் உண்டு.<br><br>27. திடக்கழிவு மேலாண்மை விதிகள் மற்றும் பிளாஸ்டிக் மேலாண்மை விதிகளை நடைமுறைப்படுத்தவும் இடர்பாடுகள் மற்றும் குறைபாடுகளை கண்டறிந்து நடவடிக்கை மேற்கொள்ளவும் நியமன அலுவலரை நியமித்துக் கொள்ள அதிகாரம் உண்டு.<br><br>28. மேற்படி துணை விதிகள் குறித்து பத்திரிக்கை, வானொலி, தொலைக்காட்சி, விளம்பர பதாகைகள், துண்டு பிரசுரங்கள் மூலம் விளம்பரப்படுத்த வேண்டும்.<br><br>29. துணை விதிகள் வெளியிடப்பட்ட 30 நாட்கள் கால அவகாசத்திற்கு பின்பு பதிவு கட்டணம் மற்றும் அபராத கட்டணம் விதித்தல் போன்றவை நடைமுறைக்கு எடுத்துக்கொள்ளப்படும்.<br><br>30. துணை விதிகளில் குறிப்பிடப்பட்டுள்ள பதிவு கட்டணம் / அபராத கட்டணம் செலுத்த தவறுவோர் மற்றும் விதிமுறைகளை மீறுவோர் மீது நகர காவல் சட்டம், மாவட்ட காவல் சட்டம் மற்றும் இந்திய தண்டனை சட்டத்தின் கீழ் நடவடிக்கை எடுக்கப்படும்.<br><br>31. துணைவிதிகளில் தெரிவிக்கப்பட்டுள்ள விதிமுறைகளை மீறுவோர் மற்றும் 14 வயதிற்கு குறைவான குற்றவாளிகளின் பொறுப்பாளர்கள் மேற்படி சட்டவிதிகளின் படி தண்டனைக்குரியவர்கள் ஆவர்.<br><br>32. மேற்படி பிளாஸ்டிக் கழிவு மேலாண்மை துணைவிதிகள் யாருக்கேனும் பாதகமாக இருப்பதாக கருதினால் அதனை | |

| | | |
|---|---|---|
| | தூத்துக்குடி மாநகராட்சி ஆணையர் அவர்களுக்கு முறையாக எழுத்துபூர்வமாக தெரிவிக்கலாம். அதன் பேரில் மாமன்றம் தக்க நடவடிக்கை மேற்கொள்ளும்.<br><br>33. துணை விதிகளின் அட்டவணைகளில் குறிப்பிடப்பட்டுள்ள கட்டண விகிதங்களில் ஒவ்வொரு ஆண்டும் அடிப்படை கட்டணத்தில் 10% வீதம் உயர்த்தி கொள்ளலாம்.<br><br>34. தூத்துக்குடி மாநகராட்சி பிளாஸ்டிக் கழிவுகள் மேலாண்மை துணை விதிகளில் அவசியம் ஏற்படின் திருத்தம் மேற்க்கொள்ள மாமன்றத்திற்கு முழு அதிகாரம் உண்டு.<br><br>35. அரசால் அவ்வப்போது அறிவிக்கப்படும் அறிவிப்புகள், நிபந்தனைகள் அணைத்தும் இத்துணைவிதிகளுக்கு பொருந்தும்.<br><br>36. பிளாஸ்டிக் கழிவு மேலாண்மை விதிகளில் குறிப்பிடப்பட்டுள்ள வரையரைகள், விளக்கங்கள் அனைத்தும் இத்துணைவிதிகளுக்கு எடுத்துக்கொள்ளப்படும்.<br><br>**<u>அட்டவணை -1</u>**<br><u>நிர்ணயம் செய்யப்பட்டுள்ள கட்டண விகிதங்கள்</u>2) தூத்துக்குடி மாநகராட்சி சட்டம் 2008அத்தியாயம் 15ன்கீழ் துணை விதிகள் ஏற்படுதகியும் 2016ம் ஆண்டு பிளாஸ்டிக் கழிவுகள் கையாளுதல் மற்றும் மேலாண்மையை மாநகராட்சியில் நடைமுறைப்படுத்தவும், அதில் கூறப்பட்டுள்ளவாறு பிளாஸ்டிக் பொருட்களை விற்பனை செய்யவும், உருவாகும் கழிவுகளை குறைக்கவும் , சேகரித்து அப்புறப்படுத்தவும், பதிவுசெய்தல், மற்றும் நிர்வாகக்கட்டணங்களை மாற்றியமைத்தும் மத்திய சுற்றுச்சூழல், காடுகள் மற்றும் பாதுகாப்புச்சட்டம் 1986(29.8.1986) பிரிவு 6,8 மற்றும் 25ன்படியும் பிளாஸ்டிக்கழிவு மேலாண்மை விதிகள் 2016ன்படியும் வகுப்பு 15ன்கீழ் உள்ளாட்சி அமைப்புகளுக்கான கட்டணம் மற்றும் பொறுப்புகள் அடங்கிய பிளாஸ்டிக்கழிவு மேலாண்மை திட்ட கட்டளை கொத்து (Bye laws) தயார் செய்யப்பட வேண்டும் என்று நகராட்சி நிர்வாக ஆணையர் அவர்களின் கடித ந.க.எண்.33180/2016/பி3 நாள்.2.01.2017ல் நகராட்சி நிர்வாக ஆணையர் அவர்களால் அறிவுறுத்தப்பட்டுள்ளது.<br><br>புதிய பிளாஸ்டிக் கழிவு மேலாண்மை விதிகள் 2016 மற்றும் துணைவிதிகள் தூத்துக்குடி மாநகராட்சியில் நடைமுறைப்படுத்த ஏதுவாக மாமன்ற கூட்டப்பொருள் அனுமதி வேண்டப்படுகிறது. மேலும் தூத்துக்குடி மாநகராட்சியில் நடைமுறைப்படுத்தப்பட கீழ்க்காணும் புதிய பிளாஸ்டிக் கழிவு | |

மேலாண்மை விதிகள் **2016** மற்றும் துணைவிதிகளைஅமுல்படுத்த மாமன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

## பிளாஸ்டிக் கழிவு மேலாண்மை விதிகள் 2016 மற்றும் துணை விதிகள்

தூத்துக்குடி மாநகராட்சி சட்டம் 2008 அத்தியாயம் 15ன் கீழ் துணை விதிகள் ஏற்படுத்தியும் 2016ம் ஆண்டு பிளாஸ்டிக்கழிவு மேலாண்மை விதி உட்பிரிவுகளின்படியும் பிளாஸ்டிக்கழிவுகள் கையாளுதல் மற்றும் மேலாண்மையை மாநகராட்சியில் நடைமுறைப்படுத்தவும், அதில் கூறப்பட்டுள்ளவாறு பிளாஸ்டிக் பொருட்களை விற்பனை செய்யவும், உருவாகும் கழிவுகளைகுறைக்கவும், சேகரித்து அப்புறப்படுத்தவும்,பதிவு செய்தல், மற்றும் நிர்வாகக்கட்டணங்களை (User Fee) மாற்றியமைத்தும் மத்திய சுற்றுச்சுழல்,காடுகள் மற்றும் பாதுகாப்புச்சட்டம் 1986 (29.08.1986) பிரிவு 6, 8 மற்றும் 25ன்படியும் பிளாஸ்டிக்கழிவு மேலாண்மை விதிகள் 2016ன்படியும் வகுப்பு 15ன் கீழ் உள்ளாட்சி அமைப்புகளுக்கான கட்டணம் மற்றும் பொறுப்புகள் அடங்கிய பிளாஸ்டிக்கழிவு மேலாண்மை திட்ட கட்டளை கொத்து (Bye laws) தயார் செய்யப்பட வேண்டும் என்று நகராட்சி நிர்வாக ஆணையர் அவர்களின் கடித ந.க.எண் 33180/ 2016/ பி3 நாள்:02.01.2017ல் நகராட்சி நிர்வாக ஆணையர் அவர்களால் அறிவுறுத்தப்பட்டுள்ளது.

அதன்பேரில் கீழ்கண்டவாறு நிர்வாக கட்டண விகிதங்கள் அபராத கட்டணங்கள் மற்றும் பிளாஸ்டிக்கழிவு மேலாண்மை திட்டம் செயல்படுத்துவதற்கான நடவடிக்கைகள் அடங்கிய கீழ்கண்ட துணை விதிகள் ஏற்படுத்தப்பட்டுள்ளது.

1. தூத்துக்குடி மாநகராட்சி எல்லைக்குட்பட்ட தெருக்கள், சந்துகள், கடைவீதிகள், குடியிருப்புகள், தொகுப்பு வீடுகள், உணவகங்கள், அலுவலகங்கள், வணிகவளாகங்கள் இன்ன பிற இடங்களில் வசிக்கும் மக்கள் பிளாஸ்டிக்கழிவுகளை தெருக்களிலோ, சாலை ஓரங்களிலோ, சந்துகளிலோ, கழிவுநீர்க்கால்வாய்களிலோ, பொது இடங்களிலோ மற்றும் நீர்நிலைகளிலோ போடக்கூடாது என்று தடைவிதிக்கப்படுகிறது.

2. மக்கள் வசிக்கும் மற்றும் கூடும் இடங்களில் உருவாகும் பிளாஸ்டிக்கழிவுகளை தனியாக பிரித்து திடக்கழிவு மேலாண்மை விதிகள் 2016-க்குட்பட்டு சேகரித்து ஒப்படைக்க வேண்டும்.இது வீடு அல்லது நிறுவனத்தின் உரிமையாளர் அல்லது பொறுப்பாளரது கடமையாகும்.

தேவையான கூடைகள் சொந்த செலவில் வாங்கி உபயோகிக்கப்பட வேண்டும்.

3. இவ்வாறு பிரித்து சேகரிக்கப்பட்ட பிளாஸ்டிக்கழிவுகளை மாநகராட்சி வாகனம் ஒவ்வொரு வீட்டிற்கும் குறிப்பிட்ட நேரத்தில் நேரில் வந்து பெற்றுக்கொள்ளும். தனித்தனியாக பிரிக்கப்பட்ட இந்த பிளாஸ்டிக்கழிவுகளை வாகனத்தின் பொறுப்பாளரிடம் நேரில் ஒப்படைப்பது வீட்டின் அல்லது நிறுவனத்தின் உரிமையாளர் அல்லது பொறுப்பாளரது கடமையாகும். பிரிக்கப்படாத பிளாஸ்டிக்கழிவுகள் கண்டிப்பாக வாங்கப்படமாட்டாது.

4. அடுக்குமாடி குடியிருப்புகள், தொகுப்பு குடியிருப்புகள் மற்றும் இதர ஒன்றுக்கு மேற்பட்ட குடியிருப்புகள் உள்ள பகுதியில் உள்ள வீடுகளது அல்லது நிறுவனங்களது உரிமையாளர் மற்றும் அவர்களது பிரதிநிதிகள் மாநகராட்சியின் வாகனம் வரும் போது அவை நிறுத்தப்பட்டிருக்கும் இடத்தில் நேரில் கொண்டு வந்து மேற்படி பிளாஸ்டிக்கழிவுகளை ஒப்படைக்க வேண்டும். மாநகராட்சி பணியாளர்களால் மாடி ஏறி வந்து பிளாஸ்டிக்கழிவுகள்பெற்றுக் கொள்ளப்பட மாட்டாது.

5. மீன், கோழி, ஆடு போன்ற இறைச்சி கடை நடத்துபவர்கள் வாடிக்கையாளர்களுக்கு பொட்டலம் பொதிந்து கொடுக்க பாலிதீன் பைகளை பயன்படுத்த கூடாது. கழிவுகளை தெருக்களிலோ அல்லது திறந்த வெளியிடங்களிலோ அல்லது கழிவுநீர்க் கால்வாய்களிலோ போடக்கூடாது. அவைகளை கசிவு ஏற்படாத வகையில் பொட்டலங்களாக்கி மாநகராட்சியின் வாகனத்தில் ஒப்படைக்க வேண்டும். இதற்காக பிளாஸ்டிக் பைகளை பயன்படுத்தக் கூடாது.

6. மருத்துவமனை கழிவுகள், நோய் கிருமி சோதனை செய்யும் கூடங்கள் மற்றும் கால்நடை மருந்து கழிவுகளை எக்காரணம் கொண்டும்,பிளாஸ்டிக்கழிவுகளோடு சேர்க்கக் கூடாது. இந்திய அரசின் 1999ஆம் ஆண்டின் மருத்துவ கழிவு நீர் மேலாண்மை மற்றும் கையாளுதல் விதிகளில் கூறியவாறு மருத்துவமனை மற்றும் சோதனைச் சாலை பொறுப்பில் உரியவாறு அகற்றி அழித்தல் வேண்டும். மருத்துவமனை கழிவுகளை மாநகராட்சி பகுதியில் கொட்டுதல், புதைத்தல் மற்றும் எரித்தல் ஆகியவை தண்டனைக்குரிய குற்றமாகும்.

7. மாநகராட்சி எல்லைக்குள் பிளாஸ்டிக், ரப்பர், டயர் உள்ளிட்ட திடக்கழிவுகள் எவற்றையும் எரிப்பது தண்டனைக்குரிய குற்றமாகும்.

8. திருமண மண்டபங்கள், கோவில், சர்ச், மசூதிகள், சத்திரம், பொது கூட்டம் நடைபெறும் இடம் ஆகியவற்றில் நடைபெறும் திருமணம் மற்றும் இதர விசேஷங்களுக்கு தடை செய்யப்பட்ட பாலிதீன் கவர்கள், பிளாஸ்டிக் கப்புகள், பிளாஸ்டிக் இலைகள், பிளாஸ்டிக் மேஜை விரிப்புகள், அன்பளிப்பு கவர்கள் ஆகியவற்றை அனுமதிக்க கூடாது. மேலும் உருவாகும் பிளாஸ்டிக்கழிவுகளை முறையாக பிரித்து அப்புறப்படுத்த வேண்டும். இவற்றை கடைபிடிக்க செய்வது மேற்படி இடங்களின் உரிமையாளர்கள் மற்றும் பொறுப்பாளர்களின் கடமையாகும்.

9. உணவு விடுதிகள், தேநீர் விடுதிகள், தள்ளுவண்டியிலுள்ள உணவுப்பொருள் விற்பனை நிலையங்கள், இரவு நேரக்கடைகள், காய்கறி மொத்த வியாபார நிலையம், மார்க்கெட் ஆகியவற்றில் தடைசெய்யப்பட்ட பாலிதீன் பைகளை எக்காரணம் கொண்டும் பயன்படுத்த கூடாது. சூடான பொருட்களை பாலிதீன் கவர்களை பயன்படுத்தி பொதிந்து கொடுக்க கூடாது. உருவாகும் பிளாஸ்டிக்கழிவுகளைதெருக்களிலோ, சாலைகளிலோ அல்லது மாநகராட்சியின் எந்த ஒரு பகுதியிலோ போடக்கூடாது. அவ்வாறு போடுவது தண்டனைக்குரிய குற்றமாகும். அவற்றை தனியாக சேகரித்து உரிய முறைப்படி அப்புறப்படுத்த வேண்டும்.

10. அச்சகங்கள்,தொழிற்சாலைகள், ரசாயன மருந்து கையாளும் தொழிற்சாலை மற்றும் இதில் குறிப்பிடாத அனைத்து வணிக மற்றும் தொழில் நிறுவனங்களில் ஏற்படும் பிளாஸ்டிக்கழிவுகளை மாநகராட்சி எல்லைக்குள் கொட்டவோ, எரிக்கவோ கூடாது.

11. பிளாஸ்டிக் பொருட்கள் தயாரிப்பு, மொத்த மற்றும் சில்லரை விற்பனையாளர்கள், பயன்படுத்துபவர்கள், பிளாஸ்டிக் தயாரிப்பிற்கான மூலப்பொருட்களை விற்பனை செய்பவர்கள் உரிய பதிவு கட்டணம் செலுத்தி மாநகராட்சியின் அனுமதி பெற்று மட்டுமே செயல்பட வேண்டும். பதிவு கட்டணம் கீழ்க்கண்ட அட்டவணையில் குறிப்பிடப்பட்டுள்ளது.

| | | |
|---|---|---|
| | 12. பிளாஸ்டிக்கழிவுகளை தனியாக பிரித்து கொடுக்காததயாரிப்பாளர்கள், மொத்த மற்றும் சில்லறை விற்பனையாளர்கள், வீடுகள் மற்றும் வாடிக்கையாளர்களுக்கு அபராத கட்டணம் கீழ்கண்ட அட்டவணையில் குறிப்பிடப்பட்டுள்ளவாறு நிர்ணயம் செய்யப்பட்டுள்ளது.<br><br>13. மேற்காணும் துணை விதிகளை மீறுபவர்கள் மீது தூத்துக்குடி மாநகராட்சி சட்டம் 2008 பிரிவுகளின் கீழ் சட்டப்படியான நடவடிக்கை தொடரப்படும். மேலும் 1986 ஆம் ஆண்டு மத்திய அரசின் சுற்றுச் சூழல் பாதுகாப்பு சட்டத்திற்கு எதிராக செயல்பட்டதாக கருதி உரிய நடவடிக்கைகள் தொடரப்படும்.<br><br>14. மேலும் விதிகளில் கூறப்பட்டுள்ள, நிர்வாக கட்டணங்களை விதித்தல்,வசூல் செய்தல், அபராதக் கட்டணங்களை வசூல் செய்தல் மற்றும் அவற்றின் தொடர் நடவடிக்கை ஆகியவற்றிற்கு, மாநகராட்சியின் ஆணையாளருக்குமாநகராட்சி மன்றத்தினரால் அதிகாரம் வழங்கப்பட்டுள்ளது.<br><br>15. பிளாஸ்டிக்கழிவு மேலாண்மை விதிகள் 2016 பிரிவு (9) ன்படி,தயாரிப்பளர்கள், இறக்குமதியாளர்கள் மற்றும் பொருட்களின் மீது அங்கீகார அடையாள உரிமையாளர்கள் (Brand Owners) தங்களது செயல்பாடுகளினால் உருவாகும் பிளாஸ்டிக் கழிவுகளை பிரித்து, சேகரித்து சுற்றுப்புறச்சூழலுக்கு மாசு ஏற்படாத வண்ணம் அப்புறப்படுத்துவது குறித்த திட்டத்தினை தூத்துக்குடி மாநகராட்சியின் ஒப்புதலுடன் 6 மாத காலத்திற்குள் தயாரித்து அவற்றை 2 வருட காலக் கெடுவுக்குள் நடைமுறைப்படுத்த வேண்டும்.<br><br>16. நிர்ணயிக்கப்படும் பதிவுக்கட்டணம் மற்றும் அபராதக்கட்டணம்பொது சுகாதார பிரிவின் மூலம் வசூலிக்கப்படும்.<br><br>17. பிளாஸ்டிக் பொருட்கள் தயாரிப்பாளர்கள் அனுமதிக்கப்பட்ட (INDIAN STANDARD CODE) நிறம் மற்றும் நிறமிகள் மட்டுமே பயன்படுத்த வேண்டும்.<br><br>18. மறுசுழற்சி முறையில் தயாரிக்கப்பட்ட பாலித்தின் பைகளை எக்காரணம் கொண்டும் உணவு பதார்த்தங்கள் விற்பனை செய்வதற்கு பயன்படுத்தக்கூடாது. | |

| | | |
|---|---|---|
| | 19. பிளாஸ்டிக் கழிவுகளை உற்பத்தி செய்வோர் அதனை குறைப்பதற்கும் அவற்றை முறையாக திடக்கழிவு மேலாண்மை விதிகள் 2016 பிரகாரம் அவ்வப்போது அறிவிக்கப்படும் நடைமுறைகளுக்குட்பட்டும் கையாளுவதற்கு நடவடிக்கைகள் மேற்கொள்ள வேண்டும்.<br><br>20. பொது கூட்டங்கள் மற்றும் பொது நிகழ்ச்சிகளை நடத்துவோர் குறைந்தபட்சம் 3 நாட்களுக்கு முன்னதாக மாநகராட்சியின் அனுமதி பெற வேண்டும்.<br><br>21. பன்னடுக்கு பாலிதீனாலான பை, சிறுபை மற்றும் பொட்டலங்கள் தயாரித்து சந்தை படுத்தும் உற்பத்தியாளர்கள், இறக்குமதியாளர்கள், தர அடையாளதாரர்கள் (Brand Owners) தங்களது பொருட்களின் மூலம் உருவாகும் பிளாஸ்டிக் கழிவுகளை சேகரிப்பது மற்றும் அப்புறப்படுத்துவது குறித்து திட்டம் தயாரித்து 6 மாத காலத்திற்குள் மாசு கட்டுப்பாட்டு வாரியம் ஒப்புதல் பெற்று 2 ஆண்டுகளுக்குள் நடைமுறைப்படுத்த வேண்டும்.<br><br>22. மறுசுழற்சி செய்ய முடியாத பன்னடுக்கு பிளாஸ்டிக் பைகளை தயாரிப்போர் 2 வருட கால இடைவெளிக்குள் அவற்றை நிறுத்தி கொள்ள வேண்டும்.<br><br>23. பிளாஸ்டிக் பைகள் தயாரிப்பாளர்கள் அரசாணை வெளியிட்ட 3 மாத காலத்திற்குள் மாசு கட்டுப்பாட்டு வாரியத்தில் பதிவு செய்து கொள்ள வேண்டும்.<br><br>24. பிளாஸ்டிக் மேலாண்மை விதிகள் 2016-ன் கீழ் துணை விதிகள் ஏற்படுத்தப்பட்டு அரசிதழில் வெளியான 6 மாத காலத்திற்கு பின் எந்த ஒரு தயாரிப்பாளர்கள் / உற்பத்தியாளர்கள் மாசு கட்டுப்பாட்டு வாரியத்தின் உரிய பதிவு மற்றும் அங்கீகாரம் இல்லாமல் பிளாஸ்டிக் அல்லது பன்னடுக்கு பிளாஸ்டிக் பொருட்களை பயன்படுத்தக்கூடாது.<br><br>25. பிளாஸ்டிக்கை மூலப் பொருளாக கொண்டு கேரி பேக், பிளாஸ்டிக் சீட் போன்றவற்றை தயாரிப்போர் வாடிக்கையாளர்கள் / கையாளுவோர் குறித்த விபர பதிவேடுகளை பராமரிக்க வேண்டும்.<br><br>26. பிளாஸ்டிக் கையாளுதல் தொடர்பான புகார்கள் மற்றும் சந்தேகிக்கப்படும் புகார்கள் குறித்து எந்தவொரு நேரத்திலும் (இரவு அல்லது பகல்) ஆய்வு செய்ய | |

ஆணையர், பொறியாளர்கள், நகர்நல அலுவலர், சுகாதார அலுவலர்கள், சுகாதார ஆய்வாளர்கள் ஆகியோர் குழுவாகவோ தனியாகவோ ஆய்வு மேற்க்கொள்ள அதிகாரம் உண்டு.

27. திடக்கழிவு மேலாண்மை விதிகள் மற்றும் பிளாஸ்டிக் மேலாண்மை விதிகளை நடைமுறைப்படுத்தவும் இடர்பாடுகள் மற்றும் குறைபாடுகளை கண்டறிந்து நடவடிக்கை மேற்கொள்ளவும் நியமன அலுவலரை நியமித்துக் கொள்ள அதிகாரம் உண்டு.

28. மேற்படி துணை விதிகள் குறித்து பத்திரிக்கை, வானொலி, தொலைக்காட்சி, விளம்பர பதாகைகள், துண்டு பிரசுரங்கள் மூலம் விளம்பரப்படுத்த வேண்டும்.

29. துணை விதிகள் வெளியிடப்பட்ட 30 நாட்கள் கால அவகாசத்திற்கு பின்பு பதிவு கட்டணம் மற்றும் அபராத கட்டணம் விதித்தல் போன்றவை நடைமுறைக்கு எடுத்துக்கொள்ளப்படும்.

30. துணை விதிகளில் குறிப்பிடப்பட்டுள்ள பதிவு கட்டணம் / அபராத கட்டணம் செலுத்த தவறுவோர் மற்றும் விதிமுறைகளை மீறுவோர் மீது நகர காவல் சட்டம், மாவட்ட காவல் சட்டம் மற்றும் இந்திய தண்டனை சட்டத்தின் கீழ் நடவடிக்கை எடுக்கப்படும்.

31. துணைவிதிகளில் தெரிவிக்கப்பட்டுள்ள விதிமுறைகளை மீறுவோர் மற்றும் 14 வயதிற்கு குறைவான குற்றவாளிகளின் பொறுப்பாளர்கள் மேற்படி சட்டவிதிகளின் படி தண்டனைக்குரியவர்கள் ஆவர்.

32. மேற்படி பிளாஸ்டிக் கழிவு மேலாண்மை துணைவிதிகள் யாருக்கேனும் பாதகமாக இருப்பதாக கருதினால் அதனை தூத்துக்குடி மாநகராட்சி ஆணையர் அவர்களுக்கு முறையாக எழுத்துபூர்வமாக தெரிவிக்கலாம். அதன் பேரில் மாமன்றம் தக்க நடவடிக்கை மேற்கொள்ளும்.

33. துணை விதிகளின் அட்டவணைகளில் குறிப்பிடப்பட்டுள்ள கட்டண விகிதங்களில் ஒவ்வொரு ஆண்டும் அடிப்படை கட்டணத்தில் 10% வீதம் உயர்த்தி கொள்ளலாம்.

34. தூத்துக்குடி மாநகராட்சி பிளாஸ்டிக் கழிவுகள் மேலாண்மை துணை விதிகளில் அவசியம் ஏற்படின் திருத்தம் மேற்க்கொள்ள மாமன்றத்திற்கு முழு அதிகாரம் உண்டு.

35. அரசால் அவ்வப்போது அறிவிக்கப்படும் அறிவிப்புகள், நிபந்தனைகள் அணைத்தும் இத்துணைவிதிகளுக்கு பொருந்தும்.

36. பிளாஸ்டிக் கழிவு மேலாண்மை விதிகளில் குறிப்பிடப்பட்டுள்ள வரையறைகள், விளக்கங்கள் அனைத்தும் இத்துணைவிதிகளுக்கு எடுத்துக்கொள்ளப்படும்.

## அட்டவணை -1

**நிர்ணயம் செய்யப்பட்டுள்ள கட்டண விகிதங்கள**

| வ.எண் | விவரம் | கால வரையறை | கட்டண விபரம் |
|---|---|---|---|
| 1 | எந்த ஒரு பயன்பாட்டிற்க்கும் பிளாஸ்டிக் பைகளை கையாளும் கடை உரிமையாளர்கள், தெருவோர வியாபாரிகள் மற்றும் நிறுவனங்களுக்கு பதிவு கட்டணம் | வருடம் ஒன்றிற்கு | ரூ.48,000.00<br>காலாண்டிற்கு (ரூ.12,000.00) |
| 2 | எந்த ஒரு பயன்பாட்டிற்க்கும் பிளாஸ்டிக் பைகளை கையாளும் கடை உரிமையாளர்கள், தெருவோர வியாபாரிகள் மற்றும் நிறுவனங்கள் பதிவினை புதிப்பிக்க | வருடம் ஒன்றிற்கு | ரூ.48,000.00<br>காலாண்டிற்கு (ரூ.12,000.00) |
| 3 | பொது கூட்டங்கள் மற்றும் பொது நிகழ்ச்சி நடத்துவோர் அனுமதிக்கப்பட்ட பிளாஸ்டிக் கேரி பேக், விரிப்புகள் கையாள பதிவு கட்டணம் | நிகழ்வு ஒன்றிற்கு | ரூ.1,000.00 |
| 4 | பிளாஸ்டிக் மேலாண்மை விதிகள் 2016–ன் படி பதிவு செய்யாமல் எந்த ஒரு தேவைக்கும் பிளாஸ்டிக் பைகளை பயன்படுத்தும் கடை உரிமையாளர்கள், தெருவோர வியாபாரிகள மற்றும் நிறுவனங்களுக்கு. | நிகழ்வு ஒன்றிற்கு | ரூ.5,000.00 |
| 5 | 50 மைக்ரான் தடிமனுக்கு குறைவான பாலிதீன் பைகளை விற்பனை செய்தல் அல்லது பயன்படுத்துதல் | நிகழ்வு ஒன்றிற்கு | ரூ.1,000.00 |

| | | | |
|---|---|---|---|
| 6 | பிளாஸ்டிக் மேலாண்மை விதிகள் 2016-ன் படி அங்கீகாரம் பெற்ற முத்திரை மற்றும் விலாசம் இடப்படாத பாலிதீன் பைகள், பாலிதீன் தாள்கள் மற்றும் பன் அடுக்கு பொட்டல பொருட்கள் கையாளும் அல்லது வாடிக்கையாளர்களுக்கு விற்பனை செய்யும் சில்லரை வியாபாரிகள், தெருவோர கடைகள் மற்றம் வணிக நிறுவனங்கள் | நிகழ்வு ஒன்றிற்கு | ரூ.5,000.00 |
| 7 | தயாரிப்பளரின் பெயர், பதிவு எண், தடிமன், மறுசுழற்சி செய்யக்கூடியவை, மக்கக்கூடியவை போன்ற விபரங்களை ஆங்கிலத்தில் அச்சிடாத பாலிதீன் பைகள், பொருட்கள்/பன்னடுக்கு பிளாஸ்டிக் பொருட்கள் கையாளுதல் | நிகழ்வு ஒன்றிற்கு | ரூ.2,000.00 |
| 8 | பெயர் மற்றும் சான்று எண் ( விதி 4H ) மக்கக்கூடிய பிளாஸ்டிக்கிலிருந்து தயாரிக்கப்பட்ட பாலிதீன் பைகளின் மீது மறுசுழற்சி அல்லது மக்கக்கூடியது என ஆங்கிலத்தில் அச்சிடாமல் இருந்தால் | நிகழ்வு ஒன்றிற்கு | ரூ.1,000.00 |
| 9 | திறந்த வெளி, காலிமனை, பொது இடங்கள் மற்றும் தனியார் இடங்களில் பிளாஸ்டிக் கழிவுகளை எரித்தல்<br>(அ) தனி நபர் தனது வளாகத்திற்குள்<br>(ஆ) தனி நபர் பொது இடங்களில்<br>(இ) வணிக வளாகங்கள் மற்றம் நிறுவனங்கள் | நிகழ்வு ஒன்றிற்கு | ரூ.500.00<br>ரூ.1000.00<br>ரூ.2000.00 |
| 10 | பொது நிகழ்ச்சிகளுக்கு பிறகு 24 மணி நேரத்திற்குள் உணவு மற்றும் சேவைகளுக்காக பயன்படுத்திய கழிவுகளை முறைப்படி அகற்ற தவறுபவர்களுக்கு | நிகழ்வு ஒன்றிற்கு | ரூ.5000.00 |
| 11 | காபி, டீ,பழச்சாறு, குளிர்பானங்கள், உணவு பதார்த்தங்கள் போன்றவற்றை அனுமதிக்கப்படாத பாலிதீன் பைகளில் நேரடியாக பொதிந்து கொடுத்தல் | நிகழ்வு ஒன்றிற்கு | ரூ.1000.00 |

| | | | |
|---|---|---|---|
| | | | |
| 12 | இறைச்சி, மீன், நொங்கு, சிறிய திண்பண்டங்கள் போன்ற வகையான உணவு பொருட்களை தடை செய்யப்பட்ட பாலிதீன் பைகளில் பொதிந்து கொடுத்தல் | நிகழ்வு ஒன்றிற்கு | ரூ.500.00 |
| 13 | உணவு பொருட்கள் அல்லாத பூ கடைகள், இதர விற்பனை நிலையங்கள் மற்றும் நிறுவனங்களில் அனுமதிக்கப்படாத பாலிதீன் பைகளை பயன்படுத்துதல் | நிகழ்வு ஒன்றிற்கு | ரூ.1000.00 |
| 14 | பிளாஸ்டிக் கழிவுகளை முறையாக கையாளாமல் தொற்று நோய்கள் எளிதில் பரவுவதற்கு காரணமாக இருத்தல் | நிகழ்வுக்கு தக்கவாறு | ரூ.100 முதல் ரூ.1.0 லட்சம் வரை |
| 15. | பொருட்களை வாங்க வருபவர்களுக்கு 50 மைக்ரானுக்கு மேற்பட்ட பாலிதீன் பைகளானாலும் உரிய கட்டணம் வசூல் செய்யாமல் இலவசமாக வழங்குதல் | நிகழ்வு ஒன்றிற்கு | ரூ.500 |
| 16. | எந்தவொரு காரணத்திற்காகவும் அனுமதிக்கப்படாத பாலிதீன் பைகளை பயன்படுத்தும் பொது மக்களுக்கு | நிகழ்வு ஒன்றிற்கு | ரூ.100 |

இச்செயல்பாடுகள் அனைத்தும் மாவட்ட அரசிதழில் வெளியிட்ட 30 நாட்களுக்கு பின் அமுலுக்கு எடுத்துக் கொள்ளப்படும்.

**<u>அலுவலக குறிப்பு:</u>**

1. பொது சுகாதார நலன் கருதியும், அரசு விதிகளின்படியும் மாமன்றம் அனுமதிக்கலாம்.
2. மேற்காணும் புதிய பிளாஸ்டிக் மேலாண்மை விதிகள் **2016** மற்றும் துணை விதிகள் தொடர்பாக நாளிதழ் மற்றும் மாவட்ட அரசிதழில் பிரசுரமாகும் அறிவிப்புகளுக்கான செலவினங்களுக்கும் அனுமதிக்கலாம்.

எச்.3/425/2017

| | | |
|---|---|---|
| | **3)**இம்மாநகராட்சிக்குப் பாத்தியப்பட்ட சிவன் கோவில் தெரு திருமண மண்டபத்திற்கான உரிமம் காலம் **2014–2015** முதல் **2016–2017** வரையிலான மூன்று ஆண்டு தொகுப்பானது **31.07.2017**ல் முடிவு பெறுகிறது. **2017–2020** மூன்றாண்டு தொகுப்பில் (**2017–2018** முதல் **2019–2020**ம்) மூன்று ஆண்டுகளுக்கு அனுபவிக்கும் உரிமத்திற்கு பொது ஏல நிபந்தனைகளின் படி பொது ஏலம் மற்றும் ஒப்பந்தப்புள்ளி கோரவும் அதன் வகைக்கு ஏற்படும் செலவினங்களுக்கும் மாமன்ற அனுமதி வேண்டப்படுகிறது. | **48)** அலுவலகக் குறிப்பு அனுமதிக்கப்பட்டது |

| | | |
|---|---|---|
| | **<u>அலுவலகக் குறிப்பு:</u>** மாமன்றம் அனுமதிக்கலாம். **அ16/556/2014** | |
| | **4)**தூத்துக்குடி மாநகராட்சிக்குப் பாத்தியப்பட்ட வார்டு எண் **56**, அத்திமரப் பட்டி வாய்க்கால் வடக்குத்தெரு பாலத்தின் கீழ்புறம் வாய்க்கால் பக்கம் உள்ள **25** தென்னை மரங்கள் மற்றும் பாரதி நகர் பம்ப் அறை, சாந்தி நகர் பம்ப் அறை சாந்தி நகர் ரேசன் கடைகளில் உள்ள **9** தென்னை மரங்கள் அத்திமரப்பட்டி வாய்க்கால் வடக்குத்தெரு பாலத்தின் மேல்புறம் உள்ள **28** தென்னை மரங்கள் மற்றும் அத்திமரப்பட்டி பகுதியில் மாநகராட்சிக்கு சொந்தமான **24** பனை மரங்களும் உள்ளன. மேற்படி மரங்களை பராமரிக்கும் குத்தகை உரிமம் **31.07.2017**ல் முடிவடைகிறது. எனவே மேற்படி இனத்தினை **2017–2018** முதல் **2019–2020** வரை மூன்று ஆண்டுகளுக்கு அனுபவித்துக் கொள்ளும் உரிமத்திற்கு ஏலம் மற்றும் ஒப்பந்தப்புள்ளி கோரவும் இவ்வகைக்கு ஏற்படும் செலவினங்களுக்கும் இம்மாமன்ற அனுமதி வேண்டப்படுகிறது.<br><br>**அலுவலகக் குறிப்பு –** மாமன்றம் அனுமதிக்கலாம்.<br><br>**அ16/20353/2012** | **49)** அலுவலகக் குறிப்பு அனுமதிக்கப்பட்டது |
| | **5)**தூத்துக்குடி மாநகராட்சியில் நடைபெறும் பாதாள சாக்கடை திட்ட பணிகளில் **24** MLD கொள்ளளவு கழிவு நீர் சுத்திகரிப்பு நிலையத்தினை தனியார் பங்களிப்பு மற்றும் நிதி அளிப்புடன் வடிவமைத்து கட்டி பராமரித்து மாநகராட்சிக்கு ஒப்படைத்தல் முறையில் (DBFOT) செயல்படுத்த M.s OEG & WABAG (Joint Venture) மாமன்ற தீர்மானம் எண் **106** நாள் **14.06.2013**ல் அனுமதி பெறப்பட்டு வேலை உத்திரவு வழங்கப்பட்டது.<br><br>மேற்படி நிறுவனம் கழிவு நீர் சுத்திகரிப்பு நிலைய கட்டுமான பணியினை துவக்க நிலையிலே மிகவும் காலம் தாழ்த்தியதால் அன்னாருடைய ஒப்பந்தம் இவ்வலுவலக கடித எண் இ**3/11512/2007** நாள் **27.07.2016**ல் ரத்து செய்து உதிரவிடப்பட்டுள்ளது.<br><br>கழிவு நீர் சுத்திகரிப்பு நிலையம் அமைக்கும் பணியின் அவசியம் கருதி அரசு முதன்மை செயலாளர் நகராட்சி நிர்வாகம் (ம) குடிநீர் வழங்கல்துறை அவர்களின் **12.08.2016** அன்றைய ஆய்வுக் கூட்டத்தில் எடுக்கப்பட்ட முடிவின்படி தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியம் மூலம் இப்பணியினை மேற்கொள்ள நடவடிக்கை எடுத்திட தெரிவிக்கப்பட்டதின் அடிப்படையில் தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரிய செயற்பொறியாளரிடமிருந்து ரூ.**40.00** கோடி மதிப்பீட்டிலான விரிவான திட்ட அறிக்கை பெறப்பட்டு நிதி மற்றும் அரசாணை பெற்றுத்தர நகராட்சி நிர்வாக ஆணையர் அலுவலகத்திற்கு இவ்வலுவலக கடித எண் இ**3/11512/2007** நாள் **01.11.2016**ல் அனுப்பப்பட்டுள்ளது. இதுவரை | **50)** அலுவலக குறிப்பு அனுமதிக்கப்பட்டது |

| | | |
|---|---|---|
| | மேற்படி திட்ட அறிக்கைக்கு அனுமதி கிடைக்கப்பெறவில்லை. மேலும் தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியத்தால் செயல்படுத்தப்பட்டு வரும் பாதாளச்சாக்கடை திட்டப் பணிகள் விரைவில் முடிவுபெறும் நிலையில் உள்ளதால் கழிவு நீர் சுத்திகரிப்பு நிலையம் உடனடியாக அமைக்க வேண்டிய சூழ்நிலை உள்ளது. இந்நிலையில் நகராட்சி நிர்வாக ஆணையர் அவர்களின் கடித எண் 17817/2013/UGSS-1 நாள் 11.05.2017ல் கழிவு நீர் சுத்திகரிப்பு நிலையத்தினை தனியார் பங்களிப்பு மற்றும் நிதியளிப்புடன் விருப்ப கேட்புக்கோரி (EOI) செயல்படுத்துவதற்கான நடவடிக்கை மேற்கொள்ள தெரிவிக்கப்பட்டுள்ளது. எனவே மாநகரின் பொது சுகாதாரத்தை கருதி தூத்துக்குடி மாநகராட்சியில் நடைபெறும் பாதாள சாக்கடை திட்ட பணிகளில் 24 MLD கொள்ளளவு உள்ள கழிவு நீர் சுத்திகரிப்பு நிலையத்தினை தனியார் பங்களிப்பு மற்றும் நிதி அளிப்புடன் வடிவமைத்த கட்டி பராமரித்து மாநகராட்சிக்கு ஒப்படைத்தல் முறையில் (DBFOT) உரிய விருப்ப கேட்பு கோரி நடவடிக்கை மேற்கொள்ள (Expression of Interest) மாமன்ற அனுமதி வேண்டப்படுகிறது,<br><br>**அலுவலக குறிப்பு** மாமன்றம் அனுமதிக்கலாம் இ3/11512/2007 | |

ஆணையர் (ம) தனி அலுவலர்
தூத்துக்குடி மாநகராட்சி